**செ.வெ. எண்: 341** **நாள்: 16.06.2012**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை சமூகப் பாதுகாப்புத்துறையால் மாநில குழந்தை பாதுகாப்பு சங்கத்திற்கு கீழ்கண்ட பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**நிரப்பப்படவுள்ள காலிப்பணியிடங்கள் மற்றும் தொகுப்பூதியம்**

1. திட்ட மேலாளர் – 2 பதவிகள் (தொகுப்பூதியம் ரூ.20,000/– ஒரு மாதத்திற்கு)
2. திட்ட அலுவலர் – 4 பதவிகள் (தொகுப்பூதியம் ரூ.15,000/– ஒரு மாதத்திற்கு)
3. கணக்கு அலுவலர் – 1 பதவி (தொகுப்பூதியம் ரூ.10,000/– ஒரு மாதத்திற்கு)
4. கணக்காளர் – 1 பதவி (தொகுப்பூதியம் ரூ.8,000/– ஒரு மாதத்திற்கு)
5. உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் (Data Entry Operator) - 4 பதவிகள் தொகுப்பூதியம் ரூ.5,000/– ஒரு மாதத்திற்கு)
6. கணக்கு உதவியாளர் – 1 பதவி (தொகுப்பூதியம் ரூ.5,000/– ஒரு மாதத்திற்கு)

**கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் வயது:**

**<u>திட்ட மேலாளர்</u>**

பட்டதாரி/முதுநிலை பட்டதாரி (10+2+3 மாதிரி)
குற்றவியல்/கல்வியியல்/ குழந்தை வளர்ச்சி /உளவியலாளர் /சமூகப்பணி/சமூகவியல்களில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில், கல்வி, சமூகநலம், குழந்தைநலம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் ஐந்து வருடம் பணிபுரிந்த அனுபவம் வேண்டும்.

**வயது–40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது (பொது விண்ணப்பதாரர்களுக்கு)**

கள அளவில் புதிய திட்டங்களை வகுப்பதில் பங்குபெற்ற அரசிதழ் பதிவுப்பெற்ற அலுவலர் நிலையில் அனுபவம் மிக்க ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்.
**வயது – 62 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது (ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு)**

**<u>திட்ட அலுவலர்கள்</u>**

பட்டதாரி/முதுநிலை பட்டதாரி (10+2+3 மாதிரி)
குற்றவியல்/கல்வியியல்/ குழந்தை வளர்ச்சி /உளவியலாளர் /சமூகப்பணி/சமூகவியல்களில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழிலாளர் நலன், கல்வி, சமூகநலம், குழந்தைநலம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் மூன்று வருடம் பணிபுரிந்த அனுபவம் வேண்டும்.
**வயது–40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது (பொது விண்ணப்பதாரர்களுக்கு)**

கள அளவில் புதிய திட்டங்களை வகுப்பதில் பங்குப்பெற்ற அரசிதழ் பதிவுப்பெற்ற அலுவலர் நிலையில் அனுபவம் மிக்க ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்.
**வயது – 62 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது (ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு)**

**<u>கணக்கு அலுவலர்</u>**

பி.காம்., / எம்.காம்., (10+2+3 மாதிரி)
எதாவது ஒரு நிறுவனத்தில் கணக்கு துறையில் மூன்றாண்டுகள் அனுபவம்
உதவி கணக்கு அலுவலர் அல்லது அதற்கு மேற்பட்ட பதவிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்
**வயது–40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது (பொது விண்ணப்பதாரர்களுக்கு)**
**வயது – 62 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது (ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு)**

**<u>கணக்காளர்</u>**

பி.காம்., / எம்.காம்., (10+2+3 மாதிரி)
எதாவது ஒரு நிறுவனத்தில் கணக்கு துறையில் இரண்டாண்டுகள் அனுபவம்
**வயது–40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது**

**உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் (Data Entry Operator)**
பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் கணினி கல்வியில் பட்டயப் பயிற்சி
கணினி இயக்குவதில் ஒரு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
**வயது–40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது**

**<u>கணக்கு உதவியாளர்</u>**
வணிகவியல் மற்றும் கணக்கியலில் பிரிவில் மேல்நிலை (10+2)
கணக்குத் துறையில் ஏதாவது ஒரு நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவம்
**வயது–40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது**

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் விண்ணப்பங்கள் இணைய தளமான **{** HYPERLINK "http://www.tn.gov.in/" **}** (Social Welfare & Nutritious Meal Programme Department) லிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட பதவிகளுக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் புகைப்படத்துடன் (pass port size) 30.06.2012 ற்குள் மாலை 5.30ற்குள் கீழ்கண்ட முகவரில் வந்து சேரும் வகையில் அனுப்பப்படவேண்டும்.

முதன்மை செயலர்/ சிறப்பு ஆணையர்,
சமூகப் பாதுகாப்புத்துறை,
எண். 300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லிஸ், சென்னை–10

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**